முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நேச நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.12.2018, வெள்ளிக்கிழமை

1. **தருமபலம் கொண்ட தவசியே**
**தவபலமிக்க யோக ஞானியே**
**ஆறுமுகனார் அவதாரமாக வந்த**
**அண்ணலே ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களென **விளம்பி சிலை திங்கள்**
**வல்லமைபட முன்னான்கோர் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 13ம் நாள் 28.12.2018, வெள்ளிக்கிழமை)**

3. **வாரமதில் நேச நாயனார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரம் போகா ஞானவான்களை உருவாக்கும்
சுத்தநெறி கொண்ட கொள்கைகளை

4. கொள்கைகளை விதைத்து அருளும்
குருராசன் நல்வழி முறைகளை
ஆள்பவர்கள் சாமானியர்கள் என
அனைவரும் ஏற்று வருதல் காண

5. காணவே மனபக்குவம் திடம்
கண்டுரைக்க ஞானபலம் கூடி
ஞானவான்களாக மாற்றம் பெறுவர்
நாடெங்கும் தானதருமம் பெருகிவர

6. வருகவே கலியுகம் தன்னில்
வளமும் வல்லமையும் கூடும்
முருகப்பெருமான் சக்தியாகவே
முழுமை ஞானம் அருளி வரும்

7. வருகின்ற அரங்கமகான் திருவடி
வணங்கி உலக மக்கள் வர
முருகா எனும் செபதபம் போற்றி
முன்மொழிந்து குருவருள் தன்னை

8. தன்னிலே தரும பலத்தை
தரணியெங்கும் கொண்டு செல்ல
மண்ணுலகே அரங்கன் தலைமைக்கு
மாதரும பலத்துக்கு வந்து இனிதே

9. இனிதே கலியுகம் தன்னில்
ஏழ்மை வறுமை கொடுமை
கனிவு இல்லாத எதிர்மறை
கஷ்டங்கள் யாவும் விலகி நின்று

10. விலகியே அமைதி மகிழ்ச்சி
வினவிட சமத்துவம் சமதர்மம்
கலகமில்லா ஞானயுகமாகும்
கலியுகம் தன்னிலையினின்று மாறும்

11. மாறும் அரங்கன் தயவால்
மாறும் மன்னர் மக்களென
ஆறுமுகன் அருள் கிட்டி தேற்றம்
அற்புதமான மாற்றமும் காணும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நேச நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமபலம் கொண்டிட்ட மகா ஞான தவசியே அளவிலா தவபலம் மிக்க யோக ஞானியே முருகப்பெருமானாரின் அவதாரமாக வந்துதித்த அண்ணலே ஆறுமக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதியே **விளம்பி வருடம் மார்கழி மாதம் 13ம் நாள் 28.12.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நேச நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நேசநாயனார்.

குற்றம் இல்லாத பெருமைமிக்க ஞானவான்களை உருவாக்கிடும் சக்திமிக்க சுத்த நெறிகளை கொண்ட ஞான கொள்கைகளை உலகோரிடத்து விதைத்து அருள் செய்து காக்கும் குருராஜன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நல்ல வழிமுறைகளை நாட்டை ஆளும் ஆட்சியாளர்களும் சாதாரண மக்களும் என்றே அனைவரும் ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்திட்டால் மக்களிடம் மனப்பக்குவம் உண்டாகி மனோதிடமும் மனோபலமும் பெருகுவதோடு ஞானபலம் பெருகி ஞானவான்களாக மாற்றம் அடைந்திடுவார்கள்.

ஞானவான்கள் பெருகிட கலியுகத்தினில் வளமும் வல்லமையும் பெருகி நிற்கும் முருகப்பெருமானின் சக்தி வடிவமாக முழுமை ஞானம்தனை அருள் செய்து காக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பயபக்தியுடன் உண்மையுடன் உலகோர் பணிந்து வணங்கி வருவதுடன் முருகா முருகா என்றே ஜெபதபங்களை செய்து முருகப்பெருமானை போற்றி வரவர, குருவருள் அவர்களுக்கு முழுமையாக கிடைத்திடும். குருவருளின் துணையோடு அரங்கன் செய்யும் தருமபலத்தை உலகமெங்கும் கொண்டு செல்ல இவ்வுலகமே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமைக்கு கீழ் மாதரும பலத்திற்குள் வந்து இனிமையுடன் கலியுகமும் மாறிடும்.

கலியுகத்தினால் உண்டாகின வறுமை கொடுமைகள் ஏழ்மை நிலை எல்லாம் மாறிடும். கனிவு இல்லாது செய்யப்படுகின்ற எதிர்மறையான செயல்களால் விளையும் கஷ்டங்கள் யாவும் உலகினில் இருந்து விலகி ஓடும். உலகம் முழுதும் அமைதி உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும், உலகமெங்கும் சமத்துவமும், சமதர்மமும் பெருகி உலகமே கலகங்கள் ஏதும் இல்லாத ஞானயுகமாக ஆகிடும்.

உலகம் ஆறுமுக அரங்கனின் தயவால் ஞானயுகமாக மாறிடும். நாட்டை ஆள்பவர்களும் மக்களும் என அனைவருக்கும் முருகப்பெருமானின் அருள் கிடைத்து மக்கள் கடைத்தேற்றம் அடைந்து அற்புதமாய் மாற்றங்களை காண்பார்களப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நேசநாயனார்.

–சுபம்–